அலகு : 5 சமுதாய மொழியியல்

மொழியினை - அதன் ஒலி இலக்கண அமைப்பு பயன்பாடு இவைகளைச் சமுதாயம், பண்பாடு இவற்றுடன் இணைத்து ஆராய்வது சமுதாய மொழியியல்.

ஒரு சமூகத்தின் உறவு முறை, அம்மொழியில் வழங்கும் உறவுமுறைச் சொற்களால் நன்கு விளங்கும். மாறுபாடுடைய உறவு முறைகளைக் காட்டும் அடிப்படைச் சொற்கள்

son, daughter, grandson, grand daughhter, brother, sister, father mother, husband, wife, grand father, grand mother, uncle, aunt, cousin, nephew என்பன.

தாய்மொழி:

ஐக்கிய நாட்டுச் சபை தாய்மொழிக்குத் தரும் விளக்கம்:

The Language which a person acquires in early years and which normally becomes his natural instrument of thought and communication.

Vernacular Language.

A language which is the mother tongue of a group which is socially or politically dominated by mother group speaking a different language.

A General Statement:

It is through his mother tongue that every human being first leans to formulate and express his ideas about himself and about the world he lives. This language in which he first learns to express his ideas need not be the language which his parents use; nor need it be the language he first learns to speak since special circumstances may cause him to abandon this language more or less completely at an early age.

[The use of Vernacular Language in Education Report of the UNESCO paris 1953. Reproduced in The Sociologes of language, Ed Josbus A. fishman

" ஒருவன் சிறுவயதில் கற்றுக் கொண்டதும், சிந்திக்கவும் கருத்துக்களைப் பரிமாறவும் இயல்பாக ஒருவருக்கு உதவுவதும் ஆகிய ஒன்றே தாய்மொழி. தன்னைப் பற்றியும், உலகைப் பற்றியும் கருத்துகளை முதன் முதல் உருவாக்கவும், வெளியிடவும் உதவுவது தாய்மொழி. தன் கருத்துகளை

முதன் முதலில் வெளிப்படப் பயன்படுத்தும் இம்மொழி அவன் தாய் தந்தையர் மொழியாக இருக்க வேண்டும் என்பதில்லை! முதன் முதல் அவன் பேசக் கற்றுக் கொண்ட மொழியாகவும் இருக்க வேண்டும் என்பதில்லை. ஏனென்றால் சிறப்பட்ட காரணங்களால் ஒருவன் முதன் முதல் பேசப்பழகிய மொழியை அறவே மறந்து விடவும் கூடும்" என்பது ஐக்கிய நாட்டு அறிக்கை கூறும் விளக்கம்.

மொழி இயலும் பிற இயலும்

1. இலக்கணமும் மொழியியலும்

2. மொழியைக் கற்பித்தலும் மொழியியலும்

3. மொழிபெயர்ப்பும் மொழியியலும்

4. அகராதியும் மொழியியலும்

5. மொழியியலும் மானிடவியலும்.

அகராதியின் வகைகள்:

(1) மொழியகராதி

(2) பன்மொழி அகராதி

(3) வரலாற்று முறையகராதி

(4) வேர்ச்சொல் அகராதி.

மானிட இயலில் பண்பாட்டைப் பற்றி ஆராய்வது ஒரு பகுதி மக்கள் பண்பாட்டுடன் ஒரு கூறே மொழி. மொழியியலார் பொருளாராய்ச்சியில் (Semantics) ஈடுபடும் பொழுது, அம்மொழி பேசுகின்றவர்களுடைய பண்பாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும்.